
'He was a righteous man.'
Art from 'Happy Saints Jesus' Family & Friends eBook'
happysaints.com
St. Joseph

மார்ச் 19

# *புனித சூசையப்பர்*

புனித கன்னிமரியாளின் தூய பர்த்தாவும், இயேசுவை வளர்த்த தந்தையுமான சூசையப்பர், தாவீது அரசரின் குலத்தைச் சேர்ந்தவர். இவர் நீதிமான், தூய உள்ளம் உள்ளவர் கற்பை நேசித்தவர், தாழ்ச்சி, பொறுமை திடம் இவற்றை சிறந்த விதமாகக் கொண்டிருந்தார். ஏழையாக, மறைந்த வாழ்வு நடத்தினார். எனினும் கடவுள் முன் இவர் செல்வந்தர். பூமியில் நித்திய பிதாவின் பிரதிநிதி, திருக்குடும்பத்தின் தலைவர். திருக்குடும்பமே கடவுளது பெரிய குடும்பமான திருச்சபையின் தொடக்கம். கடவுள் இருபெரும் திரவியமாகிய தம் மகனையும் அவருடைய மாதாவையும் இவரிடம் ஒப்படைத்தார். எனவே திருச்சபையையும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவர் நல்ல மரணத்தின் பாதுகாவலர். பல தரத்தினரான மக்கள் நம்பிக்கையுடன் இவரது உதவியைத் தேடுகிறார்கள். நல்ல மரணம் அடைய இவரது உதவியைத் தேடுகிறவர்கள் பாக்கியமாக இறக்கிறார்கள். இவரிடம் கேட்டதை அடையாமல் போனதில்லை என்று புனித அவிலாதெரசம்மாள் கூறுகிறாள்.

**சிந்தனை:**

புனித சூசையப்பரைப் போல் துன்ப நேரத்தில் மௌனமாக இருக்க முயற்சிக்க வேண்டும்.

**செபம்:**

புனித சூசையப்பரே, நானும், நான் நேசிக்கிறவர்களும் என்னைச் சார்ந்தவர்களும் பாவமில்லாமல் வாழ்ந்து இறக்க உதவி செய்யும்.